# ஆண்டவரின் திருமுழுக்கு

## முன்னுரை

அன்புக்குரியவர்களே!

வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

கிறிஸ்துப் பிறப்பு பெருவிழாக் கொண்டாட்டம் இன்றோடு நிறைவுக்கு வருகின்றது.

இயேசுவின் திருமுழுக்கு கொண்டாட்டம் இன்றைய வழிபாட்டு மையக் கருத்தாக உள்ளது.

பாவம் அவரிடம் இல்லையென்றாலும், எல்லாருக்கும் உரிய வழிமுறையை பின்பற்றி தானும் திருமுழுக்கு கையால் நீரால் திருமுழுக்கு பெற முன்வருகின்றார். இதனை உறுதி செய்யும் விதத்தில் தந்தையும், ஆவியானவரும் சான்று பகர்கின்றனர்.

படைப்பிலேயே நீருக்கு முக்கியத்துவம் தரப்பட்டது என்பதனை தொடக்கநூல் சொல்லித் தருகின்றது. ஆவியானவர் படைப்பின் தொடக்கத்திலேயே நீரின் மீது அசைவாடி நீரின் தன்மையை புதுப்பித்தார். அந்த நீராலேயே இன்றும் திருமுழுக்கு அருளப்படுகின்றது. இந்த திருமுழுக்கில் தூய ஆவியின் அபிஷேகத்தோடு நடக்கின்றது என்பதுவே உண்மை.

நம்முடைய திருமுழுக்கை மனத்திலே கொண்டு, நம்மை புதுப்பித்துக் கொண்டு, இறை பிள்ளைகளாகவும், திருஅவையின் உறுப்பினராகவும், பாவத்திற்கு விடுதலைப் பெற்றவராகவும் வாழ உறுதி கொண்டவர்களாக பயணிக்க முன்வருவோம். இறையருள் பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை (எசாயா 55:1-11)

கடவுள் அன்பும் இரக்கமும் பரிவும் கொண்டவர். அவர் தந்தையைப் போல் தம் மக்களை அன்புசெய்து அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார் என்று கூறும் இன்றைய முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (1 யோவான் 5 : 1-9)

இயேசு இறைவனின் அன்பு மைந்தர். அன்பே வடிவான அவர் அன்பையே தனது கட்டடளையாகக் கொடுத்தார் என்று திருத்தூதர் யோவான் இன்றைய இரண்டாம் வாசகத்தில் கூறுவதை கேட்போம்.

## மன்றாட்டு

அன்பார்ந்த மைந்தரே இறைவா! திருஅவை உம்முடைய எண்ணங்களை தமதாக்கி முன்னெடுத்துச் செல்ல அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பார்ந்த மைந்தரே இறைவா! நாடுநலம் பெற, வளம் பெற உழவுத் தொழிலையும் அதனை செய்வோரையும் மதித்து, உயர்வாக கருதிட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பார்ந்த மைந்தரே இறைவா! பலியிலே பங்கேற்கும் நாங்கள், தகாத தேவையில்லாத எண்ணங்களை விடுத்து, உம்முடைய எண்ணங்களே எம்முடையது என்று வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பார்ந்த மைந்தரே இறைவா! திருமுழுக்கின் அருளை இழந்துவிடாது இருக்க, நாளும் பொழுதும், உம்முடைய அருள் துணையாலேயே வாழ்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பார்ந்த மைந்தரே இறைவா! தந்தை உம்மை குறித்து மகிழ்ந்தது போல, எங்களை குறித்து மகிழ்ந்திட, நாங்கள் அவரது திருவுளத்தை நிறைவேற்றும் மக்களாக வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.